நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
சிறப்பு அமர்வு வழக்கு எண்.65/2022

அரசு தரப்புக்காக அ. சா. 3 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஷ்ணுபிரியா,<br>காவல் ஆய்வாளர் | தொழில்/<br>பதவி | |
| கணவர்/தந்தை<br>பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 24 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of March 2026.

**<u>முதல் விசாரணை</u>–** (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 02.26 )

நான் தற்போது கடலூர் மாவட்டம் விருத்தாசலம் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.12.2021 ஆம் தேதி திரு.R.பாலகிருஷ்ணன், சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது குணசேகரன், த/பெ.குப்புசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று குள்ளஞ்சாவடி காவல்நிலைய குற்ற எண்.626/2021 சட்டப்பிரிவு 366(A) இ.தச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.(அந்த புகார் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது). (அந்த முதல் தகவல்

அறிக்கை **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது). முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகார் மனுவை இணைத்து மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குறிஞ்சிப்பாடி அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். பின்னர் ஆய்வாளர் திரு.ஷியாம் சுந்தர் என்பவர் சம்பவ இடமான வழுதலாம்பட்டில் உள்ள புகார்தாரர் வீட்டிற்கு சென்று விசாரணை செய்து பார்வையிட்டு சாட்சிகள் அறிவழகன், சிவானந்தம் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (அந்த 10.12.2021 தேதியிட்ட பார்வை மகசர் **அ.த.சா.ஆ.4** ஆகவும் மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.5** ஆகவும் குறியீ செய்யப்படுகிறது). பின்னர் சாட்சிகள் குணசேகரன், கவியரசன், பார்த்திபன், ராஜரத்தினம், செல்வம், அறிவழகன், சிவானந்தம் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் பாதிக்கப்பட்ட சிறுமியை பல இடங்களில் தேடி வந்த நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமியானவர் 22.12.2021 ஆம் தேதி குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த போது குள்ளஞ்சாவடி காவல் ஆய்வாளர் அவர்கள் பெண் போலிசார் முன்னிலையில் சந்தேகத்தின் பேரில் பாதிக்கப்பட்ட சிறுமியை விசாரணை செய்தபோது மேற்கண்ட வழக்கில் சம்மந்தப்பட்டவர் என தெரியவந்ததன் பேரில் விசாரணை செய்து இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 366(A) இ.தச –ல் இருந்து 366 இ.த.ச மற்றும் 5(l) r/w 6 of POCSO Act ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். ( 22.12.2021 தேதியிட்ட சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.8**

ஆக குறியீடு செய்யப்படுகிறது).

பின்னர் 22.12.2021 ஆம் தேதி நெய்வேலி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில் மேற்கண்ட வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். (அந்த நெய்வேலி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ந.க,355/கா.து.க.அ.நெ./2021 நாள் 22.12.2021 அறிக்கை **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது). பின்னர் சம்பவ இடமான வழுதலாம்பட்டில் உள்ள புகார்தாரர் வீட்டின் படுக்கை அறைக்கு சென்று விசாரணை செய்து பார்வையிட்டு சாட்சிகள் நாராயணன், கவிவளவன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (அந்த 22.12.2021 தேதியிட்ட பார்வை மகசர் **அ.த.சா.ஆ.8** ஆகவும் மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது). மேலும் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமி மற்றும் அருமைகண்ணு ஆகியோரை தனிதனியே விசாரணை செய்து விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மை என தெரிய வந்ததன் பேரில் இவ்வழக்கின் எதிரியை தேடி சென்றதில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இவ்வழக்கின் எதிரியை குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையம் அருகில் வைத்து 14.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்தும் உச்ச நீதிமன்ற கட்டளைகளைகளை பின்பற்றியும் எதிரி எந்தவித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அருள்ஜோதி, சுப்ரமணி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தும் நிலையம் வந்து தக்க வழிக்காவலும்

நீதிமன்ற காவலுக்கு உத்தரவு கேட்டு அனுப்பி வைத்தேன். பின்னர் அன்றைய தினமே பாதிக்கப்பட்ட சிறுமிக்கு மருத்துவ பரிசோதனை செய்ய குறிஞ்சிப்பாடி காவல்நிலைய தலைமைக் காவலர் 765 திருமதி.மனோகரி என்பவர் மூலம் கடலூர் தலைமை அரசு மருத்துவமனையில் ஆஜர் செய்யப்பட்டார். 27.12.2021 ஆம் தேதி இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமி மற்றும் புகார்தாரர் ஆகியோரை விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். பின்ன்ர அன்றைய தினமே பாதிக்கப்பட்ட சிறுமிக்கு கு.வி.மு.ச 164–ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்ய மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 29.12.2021 ஆம் தேதி இவ்வழக்கில் மற்ற சாட்சிகளான செல்வம் மற்றும் பார்த்திபன் ஆகியோரை தனிதனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 02.01.2022 ஆம் தேதி இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு மருத்துவ பரிசோதனை செய்த மருத்துவர் பவித்ரா மற்றும் ரேடியாலஜிஸ்ட் மருத்துவர் முகமது ஆரிப் ஆகியோரை விசாரணை செய்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். (அந்த பாதிக்கப்பட்ட சிறுமியின் மருத்துவ பரிசோதனை அறிக்கை 7 தாள்கள் கொண்டது **அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேலும் பாதிக்கப்பட்ட சிறுமியை மருத்துவ பரிசோதனைக்கு ஆஜர் செய்த குறிஞ்சிப்பாடி காவல்நிலைய தலைமைக் காவலர் 765 திருமதி.மனோகரி என்பவரை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 05.01.2021 ஆம் தேதி சிறுமிக்கு கல்விச் சான்றிதழ் கோரி பாதிக்கப்பட்ட சிறுமி படித்த xxxx தொழிற் பயிற்சி நிலைய தாளாளர் என்பவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அன்றைய தினமே பாதிக்கப்பட்ட சிறுமிக்கு கு.வி.மு.ச

164ன் கீழ் ரகசிய வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. பின்னர் 07.01.2022 ஆம் தேதி பாதிக்கப்பட்ட சிறுமிக்கு xxxx தொழிற் பயிற்சி நிலைய தாளாளர் திரு.கண்ணன் அவர்களை விசாரணை செய்து பாதிக்கப்பட்ட சிறுமியின் கல்விச்சான்று, சேர்க்கை விண்ணப்பம், Fees receipt, 12 ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் நகல், 12 ஆம் மாற்றுச் சான்றிதழ் நகல் ஆகியவை பெற்று வாக்குமலம் பதிவு செய்தேன். (அந்த பாதிக்கப்பட்ட சிறுமியின் கல்விச்சான்று, சேர்க்கை விண்ணப்பம், Fees receipt, 12 ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் நகல், 12 ஆம் மாற்றுச் சான்றிதழ் நகல் ஆகிய 7 தாள்கள் கொண்ட ஆவணம் **அ.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேலும் 07.01.2022 ஆம் தேதி விழுப்புரம் கிளைச் சிறையில் இருந்த இவ்வழக்கின் எதிரியான திருமலை என்பவரை நீதிமன்ற உத்தரவின்பேரில் குள்ளஞ்சாவடி காவல்நிலைய முதல்நிலைக் காவலர் 928 திரு.அன்பு தண்டபானி மற்றும் முதல்நிலைக் காவல்ர 645 திரு.பிரபு ஆகியோர்கள் மூலம் கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் ஆஜர் செய்யப்பட்டு மருத்துவ பரிசோதனை முடிக்கப்பட்டது. எதிரிக்கு மருத்துவ பரிசோதனை செய்த மருத்துவர் திரு.நடராஜன் என்பவரை விசாரணை செய்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். (அந்த எதிரியின் மருத்துவ பரிசோதனை அறிக்கை 3 தாள்கள் கொண்டது **அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேலும் எதிரியை மருத்துவ பரிசோதனைக்கு ஆஜர் செய்த குள்ளஞ்சாவடி காவல்நிலைய முதல்நிலைக் காவலர் 928 திரு.அன்பு தண்டபானி மற்றும் முதல்நிலைக் காவல்ர 645 திரு.பிரபு ஆகியோர்களை தனிதனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 11.01.2022 ஆம் தேதி இவ்வழக்கின்

புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுமி, அருமைக்கண்ணு ஆகியோரை மீண்டும் விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 366 இ.த.ச மற்றும் 5(l) r/w 6 of POCSO Act–ல் இருந்து 451, 366, 344 இ.த.ச மற்றும் 5(l) r/w 6 of POCSO Act ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவுமாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (அந்த 10.02.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது). பின்னர் இயக்குநர், குற்ற தொடர்வு துறை அவர்களின் கருத்துரை பெற்று 11.02.2023 எதிரி மீது சட்டப்பிரிவுள் 451, 366, 344 இ.த.ச மற்றும் 5(l r/w 6 of POCSO Act படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். என்னுடைய விசாரணையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சொன்ன விவரங்களைத்தான் வாக்குமூலங்களாக பதிவு செய்தேன். என்னுடைய விசாரணையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சொன்ன விவரங்களைத்தான் வாக்குமூலங்களாக பதிவு செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 கொடுத்த புகாரை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகளை விசாரிக்காமல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆவணங்களை அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து

தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 02.40)

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.